# மனிதாபிமானம் வெட்கித் தலை குனிந்த வல்வைப் படுகொலை

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி இந்தியாவின் அமிர்தசரஸ் நகரிலே ஜெனரல் ரயர் தலைமையில் ஆங்கிலேய இராணுவம் நடத்திய மனிதப்படுகொலையை விட மிகப் பயங்கரமான படுகொலையானது 1898 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2இ3இ4 ஆம் திகதிகளில் நடத்தியிருக்கின்றது.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய இப்படுகொலையை வியட்நாமில் இடம்பெற்ற மயிலாய படுகொலைக்கு சமமாக ஒப்பிட்டிருக்கிறார். ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜார்ச் பெர்னாண்டஸ் வியட்நாமிலே மயிலாய என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டுமிராண்டித்தனமான படுகொலையை உலகமே கண்டித்தது. ஆனால் வல்வெட்டித்துறையிலே இந்திய அரசு நடத்திய இனப்படுகொலைச் சம்பவத்தை திட்டமிட்டு மறைத்தது பெரும்பாலான இந்திய பத்திரிகைகளும் இப் படுகொலைச் சம்பவத்தை மறைப்பதில் இந்திய அரசுக்கு உறுதுணையாக நின்றன.

ஆனால் இப்படுகொலைச் சம்பவம் நிகழ்ந்த 13 நாட்களுக்குப் பின் வல்வெட்டித்துறைக்குச் சென்ற லண்டன் பைனான்ஸியஸ் டைம்ஸ் பத்திரிகையில் டில்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவம் பற்றிய முழு விபரங்களையும் முதன்முதலாக தனது பத்திரிகையில் வெளியிட்டதைக் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது.

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி காலை வல்வெட்டித்துறை சந்தை சதுக்கத்தில் எதிர்பாராத விதமாக விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஆறு இந்திய வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயடமைந்தனர்.

இதையடுத்து வல்வெட்டித்துறைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்த ஆயிரக்கணக்கான  இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வல்வெட்டித்துறையை சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்கு சட்டத்தை பிரகடனப்படுத்தினார். மூன்று நாட்களுக்கு அச்சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை கதவுகளை உடைத்து உட்புகுந்த இராணுவம் பதறப்பதற சுட்டுக்கொன்றது. இந்த வெறியாட்டத்தில் 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றாண்டுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க முன்வந்த பிரான்ஸ் மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இராணுவம் அனுமதிக்கவில்லை.

மொத்தம் 123 வீடுகள் அடியோடு நாசமாக்கப்பட்டன. 45 கடைகள் எரிக்கப்பட்டன. 12 மீன்பிடிப்படகுகள் நாசம் செய்யப்பட்டன. 176 மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டன. வீடுகளில் இருந்த பணம்இ நகை மின் உபகரணங்கள் இந்திய இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. ஏராளமான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரிகேடியர் சங்கர் பிரசாத் மக்கள் குழு உறுப்பினர்களை அழைத்து பின்வருமாறு கொக்கரித்தார்.

இந்திய இராணுவம் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் உங்கள் ஊரை அடியோடு எரிப்பேன். நூற்றுக்கணக்கில் மக்களை சுட்டுக் கொள்ளுவேன். இராமயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது போல மீண்டும் எரியும். ஏங்களை யாரும்  எதுவும் செய்ய முடியாது.  நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்.

அவர் மிரட்டியதைப் போலவே சில நாட்களில் அழகிய வல்வெட்டித்தறை சுடுகாடானது. வல்வெட்டித்துறையால் மட்டுமல்லாது அங்கிருந்து  இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஊரணி இ பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இராணுவத்தின் வெறியாட்டம் இடம்பெற்றது.

வுல்வெட்டித்துறையில் மூன்று நாட்கள் நாவேட்டையில் நடத்திய இந்திய இராணுவம் தனது வெறியாட்டத்தை திட்டமிட்டு மறைத்தது. ஜனதா தளப் பொதுச்செயலாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இப்பிரச்சினையை அம்பலப்படுத்துவதில் முன்நின்றார். இப்படுகொலை பற்றிய ஆதாரங்கள்இ

புகைப்படங்கள் ஆகியவற்றை தொகுத்து ஆங்கிலத்திலும் தமிழிலும் ஹிந்தியிலும் நூலாக வெளியிட்டு இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் அம்பலப்படுத்தினார். இதனால் ராஜீவ் காந்தி அரசின் முகமூடி கிழிந்தது.

அமைதிக்காக வந்த அமைதிப்படை அரங்கேற்றிய வல்வைப்படுகொலையின் பின்னர் இலங்கை அரசு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலைஇ நாகர் கோவில் பாடசாலைப் படுகொலைஇ யாழ். பொது மருத்துவமனைப் படுகொலைஇ மூதூர் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலை மற்றும் வீதியோரப்படகொலைகள்இ மனிதவரிமை மீறல்கள்இ கடத்தல்கள் போன்றவற்றால் ஈழத்தமிழர்கள் நொந்து போயிருந்தனர். அவற்றிலிருந்து தப்புவதற்காக அகதி என்ற அந்தஸ்தை சுமந்து பாரத மண்ணிற்கே படையெடுத்தார்கள்.

தஞ்சமென வந்தவர்களை ஆதரிக்கும் இந்திய தேசம் ஒரு முறை – ஒரே முறை தீர்க்கமான முடிவுகளை எடுத்து ஈழத்தமிழர் நலத்தினையும் உறுதிப்படுத்த முடியாமற் போய்விட்டது.

தேவாலயங்கள்இ வைத்தியசாலைகள்இ பாடசாலைகள்இ பழம் பெருமை பேசும் பண்பாட்டுத் தலங்கள் எவற்றையும் விட்டு வைக்காது அவற்றை நிரந்தர அழிவுச் சின்னங்களாகப் பதிவு செய்து வந்த இலங்கையரசுகள்தான் எம்மை மாறிமாறி ஆட்சி செய்து வந்தன. ஈழத்தமிழர் பிரச்சினையில் இப்பொழுது பாரத மாதா பாராமுகமாக கண்ணை மூடிக்கொண்டிருக்க எந்தவிதமான நியாயமும் இல்லை. தார்மீகப் பொறுப்பை ஏற்று வழிநடத்தி ஈழத்தமிழர் பால் இந்திராஅம்மையார் காட்டிய அக்கறையை அந்த ஒப்பற்ற சீரிய பணியை இனியும் காலம் தாழ்த்தாது அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்டு ஈழத்தமிழர்கள் தமக்குரிய – அவர்களிடம் இருந்து பிரிக்க இயலாத – உரிமைகளுடன் வாழ்வதற்குப் பாரத தேசத்தின் கண்கள் விரைவில் திறந்திட வேண்டி நிற்கின்றோம்.